தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, ஜனவரி 5, புதன் கிழமை
மார்கழி 21, ஸ்ரீமுக-திருவள்ளுவர் ஆண்டு-2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்".

செய்யக்கூடிய செயலைக் குறித்து ஒருவர் அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து, அவற்றிலே தம் முழு கவனத்தையும் செலுத்தி, மேற்கொண்டு முயல்பவருக்கு முடியாதது என்று ஒன்றும் இல்லை.

1. இரங்கல் தீர்மானம்

திருக்குறளார் திரு. வீ. முனுசாமி மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். திருக்குறளார் என "அனைவராலும் சிறப்பாகவும், பெருமையாகவும் அழைக்கப்பட்டுவந்த பெருமகனார் திரு. வீ. முனுசாமி அவர்கள் தமது 81-வது வயதில், எதிர்பாராதவகையில் 4-1-1994-ஆம் நாளன்று இயற்கையெய்திய செய்தி, தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் ஆற்றொணாத்துயரத்தை அளிக்கக்கூடிய துக்கச் செய்தியாகும். அவர் சென்ற 60 ஆண்டுக்காலமாக, திருக்குறள் நெறி பரப்பும் பணியினை மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் மேற்கொண்டு, தமிழ்நாட்டிலும், பிறநாடுகளிலும் விரிவான முறையில் சுற்றுப் பயணங்கள் மேற்க்கொண்டு, குறள் நெறிக் கருத்துக்களைப் பரப்பி வந்தார். அவர், மிக ஆழ்ந்த குறள் நெறிக் கருத்துக்களை, நகைச்சுவை நயத்தோடு எடுத்துச் சொல்லும் பாங்கு ஈடு இணையற்ற தன்மை கொண்டதாகும். அவர், எந்தவொரு கருத்தை எடுத்துச் சொல்வதானாலும், எல்லோரையும் சிரிக்கவைத்து, அதன்மூலம் சிந்திக்க வைக்கும் திறன் படைத்தவர். அவர், திருக்குறளுக்கு

மிக அருமையானதொரு விளக்க உரையை, சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக்களோடு வெளியிட்டுள்ளார். அந்தத் திருக்குறள் தெளிவுரை என்றென்றும் அவருடைய நினைவுச்சின்னமாக இருந்து, தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடியதாகும். வள்ளுவரைப் பற்றியும், வள்ளலாரைப் பற்றியும் அவர் அரும்பெரும் கருத்துக்களை எடுத்துச் சொல்லி, சிறந்த பண்பாட்டு நெறியை நாடெங்கும் நிலைநாட்டியுள்ளார். 1952, பொதுத் தேர்தலில் திண்டிவனம் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினராகவும் மிகச் செவ்வனே பணியாற்றியுள்ளார். "திருக்குறளார்" என அவர் பெற்ற பட்டத்தைக் கொண்டே, திருக்குறள் முனுசாமி என தமிழ் மக்களால் அழைக்கப்பட்ட அவருக்கு, தமிழ்மறைக் காவலர், திருக்குறள் கேசரி, முப்பால் வித்தகர், நகைச்சுவை இமயம், திருக்குறள் திலகம், குறள்நெறிச் செல்வர், கலைமாமணி ஆகிய சிறப்புப் பட்டங்களும், விருதுகளும் வழங்கப்பட்டிருந்தன. இவ்வளவு சிறப்புகளுக்கும் உரிய அவருக்கு, மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில், தமிழக அரசின் 'திருவள்ளுவர்' விருதும் இவ்வாண்டு வழங்கப்பட, அவர் தேர்வு செய்யப்பட்டிருந்தார். தமிழக அரசின், 'திருக்குறள் நெறிபரப்பு மைய'த்தின் தலைவராக நியமிக்கப்பட்டு, மிகச் செவ்வனே பணியாற்றி வந்தார். இவ்வாறு சிறப்புகளுக்கும், சீரிய பண்புகளுக்கும் இலக்கணமாகத் திகழ்ந்து மறைந்துள்ள அவரது இழப்பு, உள்ளபடியே ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அன்னாரது மறைவு குறித்து, இப்பேரவை வருந்துவதுடன், அன்னாரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும், அவரது உற்ற நண்பர்களுக்கும் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்று முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு வேண்டுகிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.)

முற்பகல் 10.05

2. வினாக்கள்--விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 161 டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு நிதியமைச்சர்.